**வாக்குமூலம்**

**16–வது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

அமர்வு வழக்கு எண்: 82/2022

வழக்கு சாட்சி: அ.சா.7

| | |
|---|---|
| பெயர் : Minolshah | முகவரி/கிராமம் : கதவு எண்.155, ஜிபி ரோடு, சென்னை. |
| தகப்பனார் பெயர் : மனோஜ்ஷா | |
| வயது : 38 | |
| தொழில் : கல்கத்தா மோட்டார் கிளாஸ் கண்ணாடி வியாபாரம் | தாலுக்கா : |
| ஜாதி : | சமயம் : |

1 வது எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜரில்லை.

Solemnly affirmed in accordance with the provision of Act 1873 on the 18th February 2025:

ஆதார் அட்டையின் நகல் மற்றும் காவல்நிலைய காவலரின் உறுதிமொழி ஆகியவற்றின் அடிப்படையில் சாட்சியின் அடையாளம் உறுதி செய்யப்பட்டது. சாட்சியின் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்துக் கொண்டு கல்கத்தா மோட்டார் கிளாஸ் கண்ணாடி வியாபாரம் செய்து வருகிறேன். 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒருநாள் செல்போன் மூலமாக ஆடி கார் ஒன்றுக்கு அதன் முன்பக்க கண்ணாடி, பின்பக்க கண்ணாடி, கதவு கண்ணாடிகள்–4 ஆகியவற்றிற்கு புதிதாக கண்ணாடி மாட்டவேண்டுமென்று சொன்னார். அப்போது கோவிட்–19 தொற்றுநோய் காரணமாக ஊரடங்கு அமலில் இருந்து வந்ததால் அவர்கள் ஆட்களை அனுப்பி எங்களிடம் கண்ணாடிகளை பெற்றுக் கொண்டு எங்களுடைய தொழிலாளிகளையும் அவர்களுடன் அனுப்பி வைத்து கண்ணாடி மாற்றி கொடுக்கப்பட்டது. அதற்கு கட்டணமாக ரூ.1,40,200/– ஐ நான் வாங்கிக் கொண்டேன். அதற்கென நான் கொடுத்த

பில் தான் தற்போது என்னிடம் காண்பிப்பது. அந்த கட்டண ரசீது அ.சா.ஆ.7. என்னை போலீசார் விசாரித்தனர்.

1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –

எங்கள் கடையில் காரில் கண்ணாடிகளை மாட்டுவதற்காக நிறைய கண்ணாடிகளை வைத்திருக்கிறோம். கண்ணாடிகளை விற்பதற்கு வாட், ஜிஎஸ்டி போன்ற வரிகள் செலுத்தும் பழக்கம் உள்ளதா என்றால் – கண்டிப்பாக செலுத்தவேண்டும். ஜூன் 2021–க்கு முன்பும்,பின்பும் ஆடி காருக்கான கண்ணாடிகள் எத்தனை விற்றுயிருக்கிறேன் என்றால் – மாதம் ஒன்றுக்கு 1 அல்லது 2 ஆடி காருக்குரிய கண்ணாடி விற்பனையாகிறது. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆடி காருக்கு கண்ணாடிகளை மாற்ற வேண்டுமென்று எனக்கு போன் மூலமாக பேசிய நபர் யார் என்றால் – அது எனக்கு தெரியாது. வாங்கப்பட்ட கட்டணத்தில் பாதியை ஜி–பே மூலமாகவும், மீதத் தொகையை எங்களது நிறுவனத்தில் வேலை பார்க்கும் நபர்கள் மூலமாகவும் செலுத்தினார்கள். முதலில் ஜி–பே மூலமாக கொடுக்கப்பட்டதா அல்லது ரொக்கமாக கொடுக்கப்பட்டதா என்றால்– அது எனக்கு நியாபகமில்லை. வேலை செய்வதற்காக நான் அனுப்பப்பட்ட நபரின் பெயர் சிராஜ். அவர் என்னிடம் வேலை பார்க்கிறார். எந்த வகையில் ஆடி காருக்கான கண்ணாடிகளை மேற்படி சிராஜ் கொண்டு சென்றார் என்றால் – வாடிக்கையாளரே வாகனத்தை கொண்டு சென்று கண்ணாடிகளை பொருத்துவதற்கு வேலையாளையும் கூட்டிக் கொண்டு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது ஊரடங்கு என்பதால் நான் என் வீட்டில் இருந்தேன். கண்ணாடி, பீடிங், Solution எல்லாம் சேர்த்துதான் கொடுத்தனுப்பப்பட்டது. அ.சா.ஆ.7–ல் குறிப்பிடப்பட்டுள்ள 9840020257 என்ற எண் எனது செல்போனுக்குரிய நம்பராகும். 9841985848 என்ற எண்ணும் எனது செல்போனுக்குரியதுதான். அ.சா.ஆ.7–ல் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் அனைத்துமே யாரால் எழுதப்பட்டது என்றால் – என்னால் தான் எழுதப்பட்டது. தமிழில் எழுதப்பட்ட விவரங்கள் என்னால் எழுதப்படவில்லை என்றால்– சரிதான். 9841985848 என்ற எண்ணும், ஓனர் என்ற எழுத்தும் என்னால் எழுதப்படவில்லை. தமிழில் எழுதியுள்ளதை யார் எழுதியது என்றால் – அது எனக்கு தெரியாது. அப்ரோஸ் விமானி என்பவரை எனக்கு தெரியுமா என்றால்– எனக்கு தெரியாது. அப்ரோஸ் விமானி செய்கிற சட்டவிரோதமான

செயல்களுக்கு நானும் துணை போகிறேன் என்றால் – அது சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் மேற்படி கட்டண ரசீதை அவர்கள் கேட்டபடி எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் – அது சரியல்ல.

2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

அ.சா.ஆ.7–ல் விற்பனை செய்யப்பட்ட பொருளின் உண்மையான விலை, அதற்குரிய வரி குறித்த விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால்– சரிதான். எந்த வகையில் மேற்படி கட்டணதொகை என்னால் வசூல் செய்யப்பட்டது என்ற விவரம் அந்த ரசீதில் குறிப்பிடப்படவில்லை என்றால் – சரிதான். நான் விற்ற பொருளை வாங்கிய நபரின் பெயர், யார் வாங்கிச் சென்றார்கள், யார் பணத்தை கொடுத்தார்கள் என்ற விவரம் அ.சா.ஆ.7–ல் இல்லை என்றால் – சரிதான். அந்த நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. அன்றைய தினம் நான் கடையில் இல்லை என்பதால் அன்றைய தினம் பில்லை கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் – சரிதான். அந்த பில்லை நான் எப்போது கொடுத்தேன் என்றால் – 10,15 நாட்கள் கழித்துதான் கொடுத்தேன். அதன்பிறகு GST போன்ற வரியை நான் செலுத்தியதற்கான விவரத்தை போலீசாரிடம் நான் கொடுக்கவில்லை என்றால் – சரிதான். நான் சொல்வதுபோல் ஆடி காருக்கான கண்ணாடிகளை கொடுக்கவில்லை என்றாலும், நான் கொடுத்தாக சொல்லப்படும் பில்லானது அதற்காக கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்கள் கேட்டுக் கொண்டபடி நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்றால் – அது சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.